ISG Bible College UK




தேன் துளிகள்



# I S G BIBLE COLLEGE

## புதிய ஏற்பாடு – பின்னணியம்

## Background of the N T




# முன்னுரை:- வேத புஸ்தகம்



தேன் துளிகள்

1. உலகில் அதி விசேஷமான புஸ்தகங்களில் மேலான புஸ்தகம்
2. மெய் தேவனால் சிந்தித்து, தீர்மானித்து மனித மற்றும் பூமி என்னும் பூலோக உருண்டைக்கு அவசியமான அத்துனை ஆலோசனைகளையும், ஆதரவையும் அளிக்கின்ற ஞான புஸ்தகம்.
3. தேவனுடைய இருதயத்தை வெளிப்படுத்துவது.
4. பரலோகத்திற்கான வழிகாட்டி.
5. மனுக்குலவர்க்கத்தின் வரலாறு
6. தேவசட்டங்களின் வெளிப்பாடு
7. உலக இராஜ்ஜியங்களின் நிலையை பிரகடனப்படுத்தும் கையேடு
8. மனிதன் தன் நிலையை உணர்ந்துகொள்ளக் கிடைத்த கண்ணாடி
9. தேவ வெளிப்படுத்துதலின் நூலகம்.
10. மனிதனை நியாயந்தீர்க்கும் நீதிபுஸ்தகம்



# முன்னுரை:- வேத புஸ்தகம்



தேன் துளிகள்

இப்புஸ்தகத்தை இரண்டு உடன்படிக்கைகளாக அதாவது ஏற்பாடுகளாக பிரிக்கலாம்.

1. பழைய ஏற்பாடு
2. புதிய ஏற்பாடு

ஏற்பாடு என்றால்:

1. இருவர் மத்தியில் ஏற்படும் ஒப்பந்தமாகும்
2. ஒருவருடைய எண்ணம், சித்தம், தீர்மானத்தை மற்றவர் அறிந்து அங்கீகரிப்பது, அதற்கு முற்றிலுமாக உடன்படுவது.
3. ஒருவர் பெற்றுக்கொள்ளும் ஒப்பந்தத்தை மீறாமல் காத்துக்கொள்ளவேண்டும் என்பது தான் அதனின் தார்மீக கொள்கையாகும்.

இதன் அடிப்படையயில் ஏற்படுத்தப்பட்ட இரண்டு ஏற்படுகள்.

1. பழைய ஏற்பாடு – Old Testament – 39 புஸ்தகங்கள் அடங்கியுள்ளது
2. புதிய ஏற்பாடு – New Testament – 27 புஸ்தகங்கள் அடங்கியுள்ளது

# முன்னுரை:- வேத புஸ்தகம்



தேன் துளிகள்

## பழைய ஏற்பாடு:

1. தேவனுடைய சிருஷ்டிப்பில் மனிதன் தன்னை தானே இழந்துபோனதினால்,
2. தேவனையும் அவர் தெரிந்துகொண்ட ஓர் குடும்பத்தாரையும் குறித்துப்பேசுகின்றது
3. இஸ்ரவேல் என்னும் ஓர் பெரிய குடும்பத்தைக் குறித்ததான தீர்க்கதரிசனங்கள், ஆசீர்வாதங்கள், கட்டளைகள், ஆராதனை முறைகள், சமுகிய வாழ்வு மற்றும் தனி நபர் நீதி நெறி வாழ்வைக்குறித்து அதிகம் விவரிக்கின்றது.
4. இஸ்ரவேலருக்கு அவர்களை காப்பாற்ற வரவேண்டிய ஓர் மேசியாவைக்குறித்ததான வாக்குத்தத்தங்கள், தீர்க்கதரிசனங்கள் நிறைவாக கற்பிக்கக்கூடிய பகுதி பழைய ஏற்பாடும்.

மேசியாவைக்குறித்த விஷயங்கள்: நிறைவேறியுள்ளன!, நிறைவேறிக்கொண்டிருக்கின்றன!!, நிறைவேறப்போகின்றன!!! ஆமென்

## புதிய ஏற்பாடு:

1. முழுமையாக ஓர் தனிப்பட்ட நபரைக் குறித்ததாக இருக்கின்றது. அவர் நசரேயனாகிய இயேசு கிறிஸ்து.
2. அவரை ஏற்றுக்கொண்டவர்களைக்குறித்து மிக அதிகமான உபதேசங்கள் அடங்கியது
3. அவரை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கும் உரிய எதிர்கால நியாயத்தீர்ப்புகளும் உள்ளடக்கியது.



தேன் துளிகள்

# புதிய ஏற்பாடு

## The Background: பின்னணியம்

புதிய ஏற்பாட்டினை கற்றுக்கொள்வதற்கு இரண்டு மகத்தான விஷயங்களைச் செய்யவேண்டும்.

1. புதிய ஏற்பாடு துவக்கத்திற்கு முன் இருக்கும் வரலாற்று நிகழ்வுகள் கண்டறியவேண்டும்.
2. தேவன் தம்முடைய அநாதி தீர்மானத்தை நிறைவேற்றுவதற்காக ஆயத்தம்பண்ணின விஷயங்கள் என்ன என்பதை கற்றறியவேண்டும்.

அதற்கான காரணம் என்னவென்றால்:

புதிய ஏற்பாடு முழுவதுமாகவே கிறிஸ்து என்பரை வெளிப்படுத்துகின்றது,

அப்படியென்றால்:

கிறிஸ்துவின் வருகைக்காக (முதலாம்) என்ன விஷயங்களெல்லாம் நிறைவேறியது என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்.

ஆதார வசனம்: கலாத்தியர் 4:5(த) 4 (ஆ):–

Galatians 4:5 “காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார்.

# புதிய ஏற்பாடு- பின்னணியம்



தேன் துளிகள்

இயேசு கிறிஸ்து இந்த பூமியில் அவதாரமெடுத்து (யோவா. 1:4) வருவதற்கு முன்னமே, தேவன் இவ்வுலகத்தில் வரலாற்று பூர்வமாக மனிதர்களோடு இடைபட்டுக்கொண்டிருந்தார். இவரின் வருக்கைக்கான காரணங்களை அறிவித்து வந்தார்.

இதற்கு மூன்று அத்தியாவிஷயமான விஷயங்கள் ஆணித்தரமானதாக உள்ளது.

1. எபிரேய வம்சம்:– யூதர்களும் அவர்களின் மதமும் – (Judaism)

2. கிரேக்க சாம்ராஜ்ஜியம்: – கிரேக்கர்களும் அவர்களின் பாஷையும் (Hellinization and Koine Greek)

3. ரோம சாம்ராஜ்ஜியம்: – ரோமர்களின் சமுகவியல் மற்றும் அரசியல் ரீதியான சட்டங்களும் ஒழுங்கும். (Coliseum and amphitheatres)

மேற்கூறிய மூன்று விஷயங்களும் பழைய ஏற்ப்பாட்டில் இருந்து ஆரம்பித்து, புதிய ஏற்பாடு ஆரம்பிக்கின்ற வரை இஸ்ரவேல் வம்சத்திற்கும், புறஜாதிகள் சாம்ராஜ்ஜியங்களுக்கும் தேவன் வைத்திருந்த திட்டங்கள், வாக்குத்தத்தங்கள் முழுவதையும் நடத்தி மேசியாவின் வருகைக்கான ஆயத்தத்தை சரித்திரத்தில் நிறைவேற்றிக்கொண்டிருந்தார்.

# புதிய ஏற்பாடு- பின்னணியம்



அத்தியாவிஷயமான விஷயம் 1:.

1. எபிரேய வம்சம்:– யூதர்களும் அவர்களின் மதமும் – (Judaism)

யாத்திராகமம்: 19:6 ல், (Ex.) 19:6 “நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் என்று நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டிய வார்த்தைகள் என்றார்.

6 And ye shall be unto me a kingdom of priests, and an holy nation. These are the words which thou shalt speak unto the children of Israel.

தேவனை மற்ற ஜாதிகளிடம் பிரசித்தப்படுத்தவே, இஸ்ரவேல் ஜனங்களை தேவன் தெரிந்துவைத்திருந்தார்.

இஸ்ரவேல் ஜனங்கள் எங்கெல்லாம் செல்லுகின்றார்களோ அங்கெல்லாம், ஜீவனுள்ள பரிசுத்த தேவனாகிய “இருக்கின்றவராகவே இருக்கின்ற” யஹோவா தேவனை அறிவிக்கும்படியும் அவருக்காக பரிசுத்தமாக வாழ்ந்து காண்பிக்கவேண்டும் என்பதுதான் அவர்களின் மகத்தான பணியாக இருந்தது. (உபா. 4:35; லேவி. 22:32)

ஆனால், அவர்களின் வழிவிலகின வாழ்வும், பாகால் தெய்வங்களை அங்கீகரித்தத்தினாலும் 586–87 ல் நேபுகாச்சார் இவர்களை சிறைபிடித்தார். (பாபிலோன் சிறையிருப்பு).

### தேன் துளிகள்

தேவன் தெரிந்துகொண்டவர்கள் யார்?

1. ஆதாம் ஏவாள் (ஆதி. 1&2)
2. நோவா, நோவாவின் குடும்பம் (ஆதி. 5 – 9)
3. ஆபிரஹாம் அவர் சந்ததி (ஆதி. 12 முதல்)
   1. ஈசாக்கு
   2. யாக்கோப்பு
   3. 12 கோத்திரங்கள்

இஸ்ரவேலர் அடிபணிந்தவர்கள் யார்?

1. எகிப்து (430 வருஷம்)
2. வனாந்திரம் (40 வருஷம்)
3. கானான் தேசம் (பல வருஷங்கள்)
4. பெலிஸ்தியரின் கட்டுப்பாடு
5. அமெலேக்கியரின் கட்டுப்பாடு
6. பல பறஜாதிகளின் கட்டுப்பாடு

# புதிய ஏற்பாடு- பின்னணியம்



அத்தியாவிஷயமான விஷயம் 1:. எபிரேய வம்சம்:– யூதர்களும் அவர்களின் மதமும் – (Judaism) தேன் துளிகள்

இந்த சிறையிருப்பிலிருந்து ஜனங்கள் பல இடங்களுக்கு சிதறடிக்கப்பட்டு, பல தேசங்களில் தங்கள் வாழ்வாதாரத்திற்காக தஞ்சம் புகுந்தார்கள். இதை "மிகப்பெரிய சிதறடித்தல்" என்று அழைப்பார்கள் (The Great Dispersion).

இஸ்ரவேலர்களுக்கு தேவன் அருளிய கற்பனைகள், சட்டங்கள், பாரம்பரியங்கள், அதனின் மத சம்பந்தப்பட்ட ஆச்சாரங்களை சிதறடிக்கப்பட்ட யூதர்கள் தாங்கள் சென்ற இடங்களிலில் எல்லாம் கடைப்பிடித்துவந்தார்கள்.

கிரேக்க காலத்தில் கூட, இவர்களின் "டனக்" (TaNaK) என்றழைக்கப்பட்ட பழைய ஏற்பாட்டினை எகிப்தில் உள்ள அலெக்ஷாண்டிரியாவில் வைத்து கிரேக்கத்தில் மொழிபெயர்த்தார்கள் (கி.மு. 250–150). அதற்கு "செப்டுயஜண்ட்" (Septuagint–LXX–the seventy) என்று பெயரிட்டார்கள்.

ஆகவே, பொதுவாக கிரேக்கம் எங்கெல்லாம் வாசித்து, பேசப்பட்டதோ அங்கெல்லாம் பழைய ஏற்பாட்டின் அத்துணை விஷயங்களையும் ஜனங்கள் அறிந்து உணர ஏதுவாக இருந்தது.

# புதிய ஏற்பாடு- பின்னணியம்



தேன் துளிகள்

அத்தியாவிஷயமான விஷயம் 1:. எபிரேய வம்சம்:– யூதர்களும் அவர்களின் மதமும் – (Judaism)

புதிய ஏற்பாடு ஆரம்பிப்பதற்கு முன்பாக என்ன நடந்தது என்பதை அறிவது அவசியமான ஒன்றாகும்.

சரித்திரத்தில் மிகமுக்கிய காலகட்டமாகவும், தேவனால் புறக்கணிக்கப்பட்ட காலகட்டம் இங்கு ஏற்பட்டதை நாம் அறியலாம்.

மல்கியாவின் தீர்க்கதரிசனம் கி.மு. 400 ல் இருந்து புதிய ஏற்பாடு யோவான் ஸ்நாபகனின் பிரசங்க துவக்கம் கி.பி. 25 வரையுள்ள இஸ்ரவேலரின் சரித்த சம்பவங்களடங்கிய காலகட்டமாகும்.

இக்காலகட்டத்திற்கு அநேக பெயர்கள் உண்டு:

1. "ஏற்பாடுகளின் இடையில் – The Intertestamental Period" Deuterocanonical "இடை ஏற்பாடு காலம்"
2. "மௌன கால கட்டம்– The Silent Period" அல்லது
3. "இருண்ட காலம் – The Dark Age" என்று அழைக்கின்றனர்.

Apocryphal books

தேவன் ஜனங்களிடம் எதுவும் பேசவில்லை என்பதுதான் இதனின் காரணம்.

ஆங்கில வேதாகமத்தின் மொழிபெயர்ப்பில், மல்கியாவின் கடைசி வசனம் "சாபம் – curse" என்று முடிகிறது.

v. 6 lest I come and smite the earth with a curse தமிழில் – திரும்புவான்

# புதிய ஏற்பாடு- பின்னணியம்



தேன் துளிகள்

அத்தியாவிஷயமான விஷயம் 1:. எபிரேய வம்சம்:– யூதர்களும் அவர்களின் மதமும் – (Judaism)

மிகப்பிரதானமான மூன்று விசயங்களை இக்காலகட்டத்தில் அறியவேண்டும்.

விஷயம் 1:– இஸ்ரவேல் ஜனங்களின் வரலாறு

பழைய ஏற்பாடு இஸ்ரவேல் வம்சத்தை அதிகமாக பேசுவதாலும், இந்த இடப்பட்ட காலகட்டத்தில் தேவன் அவர்களோடு பேசாமல் இருந்ததாலும், யூதர்களுக்கு என்ன சம்பவித்தது, அவர்களின் வரலாற்று முன்னேற்றம், மதரீதியான தாக்கங்கள் எல்லாம் அறிந்திருப்பது அவசியமானதாகும்.

இந்த காலகட்டத்தில் இஸ்ரவேல் ஜனங்களின் சூழ்நிலைகள் முற்றிலுமாக மூன்று நிலைகளில் பெரிய மாற்றம் கண்டது!

அவையென்னவென்றால்:

1. அரசியல் (Politics)
2. மதவியல் (Religious)
3. சமூகவியல் (Social)

இவைகள் அத்துணையும் தானியேல் ஏற்கனவே தீர்க்கதரிசனத்தில் உரைத்தபடி நடந்தேறியது. ஆதாரம்: தானியேல் 2, 7, 8 மற்றும் 11 ம் அதிகாரங்கள் வாசிக்க.

# புதிய ஏற்பாடு- பின்னணியம்



தேன் துளிகள்

அத்தியாவிஷயமான விஷயம் 1:. எபிரேய வம்சம்:– யூதர்களும் அவர்களின் மதமும் – (Judaism)

காரணம் 1:– இஸ்ரவேல் ஜனங்களின் வ இடையில் The Intertestamental Period–"

1. அரசியல் (Politics)





332 வரை இஸ்ரவேல்
றையிருப்பின்

இஸ்ரவே ளுடைய
துவற்கு அ ா. 36:22–23;

ியர்களின் ம்,
00 வருஷத் முதல் 100
பதாகும்.

வல் ஜனத்த பதாக

அலைகள் சாந்தமாக இருக்கும்" என்பதைப் போல.

கிரேக்க சாம்ராஜியம்

1. மாவீரன் அலெக்சாண்டர்
    1. கிரேக்க சாம்ராஜ்ஜியம்
    2. ஹெலனைஷேசன் (கிரேக்க கலாச்சாரம்)
    3. கொய்னே கிரேக்கம்
2. ஆண்டியோக்கியஸ் 4 எப்பிபானஸ்
    1. பித்தோலமிக் எகிப்தை பிடிக்க செல்லுதல்
    2. யூதர்களை துன்புருத்துதல்
        1. யூதேயா
        2. சமாரியா
    3. மக்கபியர்களின் கலகம்

அத்தியாவிஷயமான விஷயம் 1:. எபிரேய வம்சம்:– யூதர்களும் அவர்களின் மதமும் – (Judaism) தேன் துளிகள்

2. மதம் (Religious)

கி.மு. 2 ம் நூற்றாண்டில் யூதர்களுக்கான மதத்தலைவர்களும், மதரீதியான குழுக்களும் ஏற்படுத்தப்பட்டார்கள்.

1) ஆசாரியர் – பிரதான ஆசாரியர்கள்
2) பரிசேயர்கள்
3) சதுசேயர்கள்
4) வேதபாரகர்கள்
5) எசன்னஸ் கூட்டம் (சவக்கடல் பகுதியில் உள்ள மலைகளில் வாழ்ந்தவர்கள்)
6) செலாத்தே கூட்டம் (Zealots) என்றழைக்கப்பட்டவர்கள்

புதிய ஏற்பாட்டில் எசன்னஸ் கூட்டம் தவிர மீதம் உள்ள அத்துனை மதசம்பந்தப்பட்டவர்களைக் குறித்து மிக அதிகமாக பதிவுசெய்கின்றது. (மத்தேயு → அப்போஸ்தல நடபடிகள் வரைக்கும்)

பாபிலோன் தேசத்தில் 70 வருட சிறையிருப்பு (கி.மு.605–535 வரை) பாரம்பரிய யூதமதம் (Orthodox Judaism) என்ற ஒரு பிரிவை பிறப்பித்தது.

# புதிய ஏற்பாடு- பின்னணியம்



அத்தியாவிஷயமான விஷயம் 1:. எபிரேய வம்சம்:– யூதர்களும் அவர்களின் மதமும் – (Judaism) தேன் துளிகள்

## 2. மதம் (Religious): – (1) ஆசாரியர் – பிரதான ஆசாரியர்கள்

1) இவர்கள் பாரம்பரியமிக்கவர்கள்:
   1) லேவியர் வம்சத்தை சார்ந்தவர்கள்
   2) ஆரோன் அபிஷேகத்தின் அடிப்படையில் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்
   3) தேவனை மனிதரோடு இணைக்கும் மகத்தான ஊழியம் பெற்றவர்கள்
   4) யூத மதத்தை பிரதிபலிப்பவர்களாக இருந்தனர்
   5) யூதர்களின் பிரதிநிதிகளாக அன்றைக்கு இருந்த அரசியல் இராஜ்ஜியங்களோடு பணிபுரிந்தவர்கள்
   6) மூன்று பிரிவுகளாக ஆலயத்தில் பணிபுரிந்தவர்கள்.
      1) லேவியன்
      2) ஆசாரியன்
      3) பிரதான ஆசாரியன்



லேவியன்




பிரதான ஆசாரியன்



# புதிய ஏற்பாடு- பின்னணியம்



தேன் துளிகள்

அத்தியாவிஷயமான விஷயம் 1:. எபிரேய வம்சம்:– யூதர்களும் அவர்களின் மதமும் – (Judaism)

2. மதம் (Religious): – (1) ஆசாரியர் – பிரதான ஆசாரியர்கள்

2) இவர்கள் ஊழியம் செய்த இடங்கள்

1) ஆசரிப்புக்கூடாரம்

2) சாலமோனின் தேவாலயம்

3) செருபாபேலின் தேவாலயம்

4) ஏரோதின் தேவாலயம்

5) ஜெப ஆலயம்

6) நியாயஸ்தலம்





ஆசரிப்புக் கூடாரம்




இரண்டாம் தேவாலயம்




ஏரோதின் தேவாலயம்




ஜெப ஆலயம்



நியாயஸ்தலம்



# புதிய ஏற்பாடு- பின்னணியம்



தேன் துளிகள்

அத்தியாவிஷயமான விஷயம் 1:. எபிரேய வம்சம்:– யூதர்களும் அவர்களின் மதமும் – (Judaism)

2. மதம் (Religious):– (2): – பரிசேயர்கள்




1) இவர்கள் யூத மதத்தை கட்டிக்காக்க வந்தவர்கள்
2) வேத வாக்கியங்களை கற்றுத்தேர்ந்த ரபீக்கள் (ஆசிரியர்கள், போதகர்கள்)
3) யூத நியாயப்பிரமாணங்கள், சட்டதிட்டங்களை கடைப்பிடித்து வாழ்பவர்கள்
4) மற்றவர்களை மிகக்கடினமாக கடைப்பிடிக்கவைப்பவர்கள்
5) மதரீதியாக விதவைகளை, அனாதைகளை சட்டப்படி பாதுகாத்து, பராமரிக்கின்றவர்கள்
6) தேவதூதர்கள் இருக்கின்றார்கள் என்ற விசுவாசம் உடையவர்கள்
7) மரணத்திற்கு பிறகு ஓர் உயிர்த்தெழுதல் உண்டு என்பதையும் அறிக்கைசெய்பவர்கள்
8) எந்த ஓர் விஷயமானாலும் கேள்வியினாலும், தேவ வசனத்தினாலும் சரியா அல்லது தவறா என்பதை உறுதி செய்கின்றவர்கள்.

உதாரணம்: 1. நிக்கோதேமுவின் இராவிசாரணை (யோவான். 3: )

2. பரிசேயர்களின் நேரடி விசாரணை (மத்தேயு 12:1)

மத். 3:7; 5:20; 15:1–2; 23:1–36; மாற். 2:16; லூக். 5:30; அப். 23:6–9

இவர்களைக்குறித்து இன்னும் அதிகமாக புதிய ஏற்பாடு விஸ்தரிக்கின்றது.

# புதிய ஏற்பாடு- பின்னணியம்



அத்தியாவிஷயமான விஷயம் 1:. எபிரேய வம்சம்:– யூதர்களும் அவர்களின் மதமும் – (Judaism) தேன் துளிகள்

2. மதம் (Religious):– (3): – சதுசேயர்கள்



மத்தேயு 3:7: மத்தேயு ( Matthew) 3:7

பரிசேயரிலும் சதுசேயரிலும் அநேகர் தன்னிடத்தில் ஞானஸ்நானம் பெறும்படி வருகிறதை அவன் கண்டு: விரியன் பாம்புக் குட்டிகளே! வருங்கோபத்துக்குத் தப்பித்துக்கொள்ள உங்களுக்கு வகைகாட்டினவன் யார்?

1) யூதமதத்தின் தலைவர்கள் (மத். 16:1–4)
2) நியாசங்கத்தின் நியாயாதிபதிகள் (அப். 4:6)
3) ஏரோது மன்னனுக்கு ஆதரவாளர்கள்
4) ஆலயத்தில் கிறிஸ்துவினால் விரட்டியடிக்கப்பட்டவர்கள் (மத். 22:34; மாற். 12:27))
5) தூதர்களை விசுவாசியாதவர்கள்
6) மரணத்திற்குப் பின் உயிர்த்தெழுதல் இல்லை என்று சாதிப்பவர்கள் (அப். 23:8)
7) இவர்கள் சாகோக்கின் வம்சாவழியைச் சார்ந்தவர்கள் என்று வாதிபவர்களும் உண்டு (2 சாமு. 15:23–29)

# புதிய ஏற்பாடு- பின்னணியம்



அத்தியாவிஷயமான விஷயம் 1:. எபிரேய வம்சம்:– யூதர்களும் அவர்களின் மதமும் – (Judaism) தேன் துளிகள்

2. மதம் (Religious):– (4): – வேதபாரகர்கள்



எஸ்றா 7:6: – எஸ்றா ( Ezra) 7:6

இந்த எஸ்றா இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அருளிய மோசேயின் நியாயப்பிரமாணத்திலே தேறின வேதபாரகனாயிருந்தான்;

இவர்கள்:

1) யூத மத்தத்தில் மெத்தப்படித்தவர்கள்
2) நியாயப்பிரமாணத்தை கற்பதே இவர்களின் பிரதான பணியாக இருந்ததன.
3) நியாயப்பிரமான புஸ்தகங்களை பிரதி எடுப்பது இவர்கள் பணி.
4) நியாயப்பிரமாணத்தைக் குறித்தி வியாக்கியானம் (பிரசங்கம்) செய்ய தகுதியானவர்கள்.
5) நியாயப்பிரமாணத்தை பிழையின்றி, மிக நேர்த்தியாக பிரதி (எழுவதின் மூலம்) எடுப்பவர்கள்.
6) பழைய ஏற்பாட்டை மிக கவனத்தோடு பாதுகாப்பவர்களாக இருந்தார்கள்.
7) இவர்களை "புத்தகத்தின் ஜனங்கள்" என்றும் அழைக்கப்பட்டார்கள்.

மத். 23:2–3; மாற். 12:28; லூக். 5:21; அப். 4:5–6

# புதிய ஏற்பாடு- பின்னணியம்



தேன் துளிகள்

அத்தியாவிஷயமான விஷயம் 1:. எபிரேய வம்சம்:– யூதர்களும் அவர்களின் மதமும் – (Judaism)

2. மதம் (Religious):– (5): – எசன்னஸ்



Essenes – எசன்னஸ் என்றழைக்கப்படும் இவர்கள், இரண்டாம் தேவாலயத்தின் காலத்தில் இருந்து வந்தவர்கள் என்ற சரித்திர சான்றுகள் உண்டு.

புதிய ஏற்பாட்டில் இவர்களுடைய பெயர் இல்லை என்றாலும், இவர்களின் பழக்கவழங்கங்களை பிரதிபலித்தவர்கள் இருந்தார்கள் என்று வேதபண்டிதர்கள் கருத்து தெரிவிக்கின்றார்கள்.

Essene – எசன்னே என்ற பதமானது வட அரமாயிக் வார்த்தையான சஸ்யா (chasya) என்பதில் இருந்து வருகின்றது, அதனுடைய கிரேக்க வார்த்தையானது “பரிசுத்தவான்” “ என்பதாகும்.

உதாரணம்: மத்தேயு 3:1–12 வரையுள்ள வசனங்களில் கூறப்படும் யோவான் ஸ்நாபகன் இந்த குழுவினரை பிரதிபலிக்கின்றார் என்ற ஆணித்தரமான வாதங்கள் உண்டு.

காரணம். எசன்னஸ் என்பவர்கள்:

1) தங்களை தங்கள் மதத்தின் காரியங்களுக்காக வைராக்கியமாக அர்ப்பணித்தவர்கள்.

# புதிய ஏற்பாடு- பின்னணியம்



தேன் துளிகள்

## 2. மதம் (Religious):– (5): – எசன்னஸ்

2) மற்ற உலக ஜனங்களை விட்டு தங்களைத் தனிமைப்படுத்திக்கொண்டவர்கள்.



3) இவர்கள்:

1. மோசேயின் நியாயப்பிரமாணத்தை மிக நேர்த்தியாக கடைபிடிப்பவர்கள்
2. வார ஓய்வு நாட்களை கடைபிடித்தார்கள்.
3. நீதி, நேர்மை, மற்றும் யதார்த்த அனுதின வாழ்விற்கு நியாயப்பிரமாணத்தை சார்ந்திருந்து உலகத்தை விட்டு விலகியிருந்தார்கள்
4. காய்கறி வகையான உணவும், இயற்கையில் கிடைக்கும் ஆகாரத்தையும் உண்டுவந்தார்கள்.

4) இவர்கள் வசித்த இடங்கள்:

1) வனாந்திரம், உயர்ந்த மலைகள், மலைக் குகைகள்

2) இவர்களாகவே அமைத்துக்கொண்ட தங்கும் இடங்கள்.

   1) ஞானஸ்நான தொட்டி

   2) பொதுவாக உணவு அருந்தும் இடம்

   3) வேதத்தை தியானம் செய்யும் இடம்





3) நசரேய விரதம் கொண்டவர்போலவும், மதுபானம் அருந்தாதவர்களாகவும் இருந்தார்கள்.

# புதிய ஏற்பாடு- பின்னணியம்



அத்தியாவிஷயமான விஷயம் 1:. எபிரேய வம்சம்:– யூதர்களும் அவர்களின் மதமும் – (Judaism) தேன் துளிகள்

2. மதம் (Religious)

1) ஆசாரியர் – பிரதான ஆசாரியர்கள்

2) பரிசேயர்கள்

3) சதுசேயர்கள்

4) வேதபாரகர்கள்

5) எசன்னஸ் கூட்டம் (சவக்கடல் பகுதியில் உள்ள மலைகளில் வாழ்ந்தவர்கள்)

6) செலோத்தே என்பவர்கள் (Zealots)

இவர்கள் மிக மத வைராக்கியமுடையவர்கள். ரோமர்களுக்கு எதிராக, ஏரோதியர்களுக்கு எதிராக தங்கள் கூட்டத்தை அமைத்துக்கொண்டவர்கள்.

இவர்கள் கூட்டத்திலிருந்து ஒருவர் கிறிஸ்துவின் சீடராக, அப்போஸ்தலனாக இருந்தார். (மத். 10:2–4; மாற். 3:16–19; லூக்கா 6:14–16; அப். 1:1–13))

புதிய ஏற்பாட்டில் எசன்னஸ் கூட்டம் தவிர மீதம் உள்ள அத்துனை மதசம்பந்தப்பட்டவர்களைக் குறித்து மிக அதிகமாக பதிவுசெய்கின்றது. (மத்தேயு → அப்போஸ்தல நடபடிகள் வரைக்கும்)



# புதிய ஏற்பாடு- பின்னணியம்

தேன் துளிகள்

அத்தியாவிஷயமான விஷயம் 1:. எபிரேய வம்சம்:–
யூதர்களும் அவர்களின் மதமும் – (Judaism)

2. மதம் (Religious)

1) ஆசாரியர்கள்
   1. லேவியர்
   2. ஆசாரியர்
   3. பிரதான ஆசாரியர்

2) பரிசேயர்கள்– separatist – பிரிவினைவாதி

3) சதுசேயர்கள் – the righteous – நீதிமான்

4) வேதபாரகர்கள் – writer – எழுத்தன்

5) எசன்னஸ் – Saint – பரிசுத்தவான்

6) செலோத்தே என்பவர்கள் (Zealots)
























# புதிய ஏற்பாடு- பின்னணியம்



தேன் துளிகள்

அத்தியாவிஷயமான விஷயம் 1:. எபிரேய வம்சம்:–
யூதர்களும் அவர்களின் மதமும் – (Judaism)

2. மதம் (Religious) – பணியிடங்கள்


1) ஆசரிப்புக்கூடாரம்
2) ஆலயம்
   1) சாலமோன் தேவாலயம்
   2) செருப்பாபேலின் தேவாலயம்
   3) ஏரோதின் தேவாலயம்
3) ஜெப ஆலயம்
4) சன்னகரிப் சங்கம்















# புதிய ஏற்பாடு- பின்னணியம்



அத்தியாவிஷயமான விஷயம் 1:. எபிரேய வம்சம்:– யூதர்களும் அவர்களின் மதமும் – (Judaism) தேன் துளிகள்

காரணம்: 2:– புறஜாதிகளின் ஆதிக்கம்



கிறிஸ்து ரோமர்களின் ஆட்சியில் பிறப்பதற்காக சரியான காரணங்கள் என்ன?



1. தானியேல் தீர்க்கதரிசனத்தின் நிறைவேறல்:–
   1. தானியேல் 2 ம் அதிகாரம் :
   2. தானியேல் 7 ம் அதிகாரம்
2. உலகெங்கும் சுவிசேஷம் என்ற தேவ சித்தம்:
   1. தேவ அன்பு

யோவான் [ John] 3:16
தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.

தேவனுடைய அன்பு – உலகத்தில் உள்ளவர்கள் நித்திய ஜீவன் அடையவேண்டும்.



# புதிய ஏற்பாடு- பின்னணியம்

அத்தியாவிஷயமான விஷயம் 1:. எபிரேய வம்சம்:– யூதர்களும் அவர்களின் மதமும் – (Judaism)தன்மையும் 2:– புறஜாதிகளின் ஆதிக்கம் கிறிஸ்து ரோமர்களின் ஆட்சியில் பிறப்பதற்காக சரியான காரணங்கள் என்ன?

2. தேவ எதிர்பார்ப்பு

2 பேதுரு [ 2 Peter] 3:9 தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்.

3. உலகத்தின் ஆயத்தம்

1. கிரேக்கர்:–



1) "ஒரே பாஷை! ஒரே உலகம்!!" இந்த கோஷத்திற்கு சொந்தக்காரர் யார் என்றால்? மாவீரன் அலெக்சாண்டர் அவர்கள்.
2) மாசிதோன் நாட்டின் இராஜா பிலிப்பு என்பவரின் மகனாகிய இளவரசர் அலெக்சாண்டர் தான் இந்த எதிர்பார்ப்புக்கு சொந்தக்காரர்.
3) கிறிஸ்துவானவர் பிறப்பதற்கு ஏறத்தாழ 350 வருடங்களுக்கு முன்பதாகப் பிறந்தவர்.
4) தன்னுடைய இலட்சியமாகிய "ஒரே பாஷை! ஒரே உலகம்!!" என்பதை வெகுசீக்கிரமாக சாதித்துக்காட்டினார்.
5) பிற நாடுகளை வெற்றிகொள்ளும் தம் யுத்தப்பயணத்தில், அவருக்கு மிகவும் பிடித்த பாஷையான "கிரேக்கம்" "கொய்னே கிரேக்கம் *koine Greek*" "பொதுவான கிரேக்க" பாஷையை (*lingua franca*) எல்லா இடங்களிலும் ஸ்தாபித்துச்சென்றார்.
6) கிரேக்க கலாச்சாரமாகிய "ஹெலனைஷேசன் – *Hellenization*" என்பதை நடைமுறைப்படுத்தினார்.
7) இவர் தன்னுடைய இளம்பிராயத்திலே மரித்துப்போனாலும், அவரின் இந்த "மொழிப்பற்று" அனேக தாக்கங்களைக் கொண்டுவந்தது.

# புதிய ஏற்பாடு- பின்னணியம்



தேன் துளிகள்

1. *கிரேக்கர்:–*

**அலெக்சாண்டரின் கிரேக்க மொழித் தாக்கமானது:**

1. கிரேக்கம் உலகபாஷையானது (கொய்னே கிரேக்கம் – பொதுவான கிரேக்கம்)
2. கிறிஸ்துவானவர் பேசும் பேச்சுமொழியாக இருந்தது
    1. எபிரேயம்
    2. கிரேக்கம்
    3. அரமாயிக்

   } **கிறிஸ்து பேசிய மூன்று பாஷைகள்**
3. அப்போஸ்தலர்கள் பிரசங்கம் செய்யும் மொழியாக இருந்தது
4. புதிய ஏற்பாடு எழுத்தப்பட்ட பாஷையாக இருந்தது
5. புதிய ஏற்பாடு கிரேக்கத்தில் புதிய வார்த்தைகளை அறிமுகப்படுத்தி அதனின் ஆவிக்குரிய வாழ்விற்கு அர்த்தமிகு பதங்களை பயன்படுத்தி, தேவ நம்பிக்கைக்குள் பெலனடையச்செய்தது.



# புதிய ஏற்பாடு- பின்னணியம்



தேன் துளிகள்

## 1. கிரேக்கர்:– உதாரணம்:

i. **கிறிஸ்து** – மேசியா – அபிஷேகம் பண்ணப்பட்டவர் (Christ – Messiah – The Anointed One)

ii. **மீட்பு** – ஒருவரை விலைக்கு வாங்குவது (Redeem – to buy back something or to exchange something for money)

iii. **மீட்கும் பொருள்** – (Ransom – மத். 20:28; மாற்கு 10:45)

மாற்கு (Mark) 10:45
அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை **மீட்கும்பொருளாகத்** தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்.

iv. **சபை** – வெளியே அழைக்கப்பட்டவர் (Church – called out ones – ’εκκλησια)

## 2. ரோமர்கள்: –

சட்ட திட்டங்களுக்குப் பிரபலமானவர்கள்!

மிக நேர்த்தியாக தங்களுடைய சாம்ராஜ்ஜியத்தை நிறுவியவர்கள்





# 2. ரோமர்கள்: –



மத்தியத்தரைக்கடல் மேற்கிலிருந்து ஐப்பிராத்து நதிவரைக்கும் ஒழுக்கம் கிரமாக:

1. மாஹானங்கள் உருவாக்கினார்கள்
2. ஒவ்வொரு மாஹானத்திற்கும் மாவட்டங்களை உருவாக்கினார்கள்
3. ஒவ்வொன்னிற்கும் ஸ்தல தேசாதிபதிகளை அமர்த்தி (கவர்னர்) சரியானபடி ஆட்சியமைத்தார்கள்.

தேவனுடைய திட்டத்தில் இவர்களும் பயன்பட்டார்கள்:

1. அகஸ்து இராயனுடைய காலத்தில் சட்ட திட்டங்கள் மிக நேர்த்தியாக ஒழுங்கு செய்யப்பட்டது.
2. குடிமதிப்பெழுத்தப்படும் சட்டம் பிறக்கப்பட்டது (Census). இந்த ஒழுக்கக்கிரமத்தின் படி கிறிஸ்துவின் பிறப்பு பதிவுசெய்யப்பட்டது (லூக்கா 2:1—7).
3. பாதைகள், வீதிகள் மிக நேர்த்தியாக போடப்பட்டது. “ஒவ்வொரு பாதையும் ரோமை நோக்கி” என்பது அவர்களின் தாரக மந்திரம் “Every Roads Leads to Rome.” இப்பேர்ப்பட்ட பாதைகளில் அப்போஸ்தலனாகிய பவுல் அதிகம் பிரயாணம் செய்துள்ளார்.




2. ரோமர்கள்: –

4. நீதி நெறி வாழ்வில் மிகவும் பின் தங்கியவர்களாக இருந்தனர்

i. பழங்காலத்து தெய்வங்கள் மீது நம்பிக்கையிழந்தவர்கள்

ii. நாட்டின் மதங்கள் பாரம்பரியத்தை கொண்டுவந்தது மட்டுமல்லாமல் (State Religion), தனி நபர் மீதுள்ள கவனிப்பைக் கைவிட்டது.

iii. நிலவில் இருந்த தத்துவ ஞானிகளின் தத்துவ சித்தாந்தங்களும் ஜனங்களுக்கு கைகொடுக்காமல் போனது.

iv. கிழக்கு மற்றும் மேற்கு தேசத்தை அன்று தாக்கத்திற்குள்ளாக்கிய “mystery cults மர்ம வழிபாட்டு முறை”:

1) தனி நபருக்கான இரட்சிப்பு,

2) தெய்வங்களோடு ஏற்படுத்தும் உறவு மற்றும்

3) மர்மம் நிறைந்த வழிபாடுகளுக்கு நேராக ஜனங்களை வழி நடத்தியது.



## 2. ரோமர்கள்: –

iv. இந்த காலகட்டத்தில் தான்:

1) வானில் நட்சத்திரம் தோன்றியது (மத். 2)

2) இரவில் தூதர்கள் தோன்றினார்கள் (லூக். 2)

3) வனாந்திரத்தில் யோவான் ஸ்நாபகன் பிரசங்கம், ஞானஸ்நானம் கொடுக்க

4) கலிலேயா, சமாரியா, யூதேயா, பெரேயா, தெக்கேபோலி பகுதிகளில் இயேசு ஊழியம் நிறைவேற்றினார் (மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் சுவிசேஷங்கள்)

5) எருசலேம் நகரில் ஜனங்கள் கூட்டம் கூட்டமாக ஆவிக்குரிய வாழ்வைத் தேடி இரட்சிக்கப்பட்டார்கள் (அப். 2: முதல்)

காரணம்: இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசம்தான்:

1. இரட்சிப்பு,
2. மன்னிப்பு,
3. சமாதானம் தரும் என்ற உறுதியான நம்பிக்கையை பிரசித்தப்படுத்தியது.

அதை கிறிஸ்துவின் வாழ்க்கை, பாடு மரணம் உயிர்த்தெழுதலில் நிரூபித்துக்காட்டியது.

# புதிய ஏற்பாடு- பின்னணியம்



தேன் துளிகள்

## 3. முதல் நூற்றாண்டின் பாலஸ்தீனம்

கிறிஸ்தவத்தின் பிறப்பைக் கண்ட அக்காலத்தின் ஆட்சியாளர் குடும்பம் யாருடையது என்றால் அது:

### 1. ஏரோதின் இராஜவம்சம் ஆகும் (Herodian Dynasty)

1. **ஏரோது மன்னன்:**

1) இவர் ரோம அரசாங்கத்தால் "யூதர்களை ஆள்வதற்காக" நியமிக்கப்பட்ட இராஜவாக இருந்தார்.
2) ஆட்சிக்காலம்: கிமு 37 → 4 கிமு வரை.
3) ஆட்சி முறை:— மிகக்கொடூரமான முறையில் இருந்தது.
4) கிழக்கிலிருந்து வந்த ஞானிகளிடம் விசாரணை செய்தவர் (மத். 2:7—8)
5) அநேகருடைய இரத்தம் சிந்தப்பட்டது. எருசலேம் சுற்றிலும் உள்ள 2 வயது குழந்தைகளை கொல்லும்வரை. (மத்தேயு 2:16) அதிகாரம்.
6) கிறிஸ்துவை கொலைசெய்ய வகைதேடினவர் (மத். 2:19)
7) யூதர்களைப் பிரியப்படுத்த ஆலயத்தை விரிவாக்கினவர்.



ஏரோது மன்னன் – நற்கிரியை

1. யூத ஆலயம் புதுப்பித்தல்
2. கட்டிடக்கலையில் புரட்சி
   1. ஏரோதுவின் அரண்மனை
   2. மசாடா அரண் [கோட்டை]
   3. சிசேரியா மரிடிமா [துறைமுகம்]
3. மத சுந்தந்திர அனுமதி
4. சனகரிப் சங்க அனுமதி
5. கிரேக்க கலாச்சார அனுமதி
6. ரோம கலாச்சார அனுமதி

ஏரோது மன்னர் பரம்பரையில் பிரசித்தமானவர்கள்:

2. ஏரோது அந்திப்பாஸ் (கி.பி 4 → 39 வரை)

1. கலிலேயா பெராயா நாட்டின் காற்பங்கு தேசாதிபதி (மத். 14:1)
2. யோவான் ஸ்நாபகனால் கடிந்துகொள்ளப்பவன் (மத். 14:3; மாற். 6:18)
3. யோவானின் ஆலோசனைப்படி நடந்தவன் (மாற். 6:20)
4. வேதாகமத்தில் தன் பிறந்த நாளை கொண்டாடிய இரண்டாமவர்
5. யோவன் ஸ்நாபகனை சிறைச்சேதம் செய்தவன் (மாற். 6:16)
6. இயேசு கிறிஸ்துவைப் பார்க்க விரும்பியவன் (லூக். 9:9)
7. கிறிஸ்துவை கொலைசெய்ய மனதாய் இருந்தவன் (லூக். 13:31)
8. கிறிஸ்துவால் "நரி" என்றழைக்கப்பட்டவன் (லூக். 13:32)
9. கிறிஸ்துவை நியாயம் விசாரித்தவன் (லூக். 23:7—12)
10. பிலாத்தோடு நண்பனாக மாறியவன் (லூக்கா. 23:12)



# புதிய ஏற்பாடு- பின்னணியம்



தேன் துளிகள்

## 3. முதலாம் ஏரோது அக்ரிப்பா

1. ஏரோது மன்னனின் பேரன். அரிஸ்டோபுலஸ் என்பவ்ரின் மகன்.
2. ஏரோது அந்திப்பாஸின் மரணத்திற்குப் பிறகு, கலிலேயா, சமாரியா, யூதேயா நாட்டின் அரசனானவன்
3. செபுதேயுவின் மகனாகிய யாக்கோபை கொலைசெய்தவன் (அப். 12:2)
4. பேதுருவை கைதுசெய்து சிறையில் அடைத்தவன் (அப். 12:3—6)
5. பேதுருவை காவல் செய்த காவலரைக் கொலைசெய்தவன் (அப். 12:19)
6. தூதனால் அடிக்கப்பட்டு புழுப்புழுத்து இறந்தவன் (அப். 12:23)




## 4. இரண்டாம் ஏரோது அக்ரிப்பா (கி. பி. 50→100 வரை)


1. ஏரோது மன்னன் குடும்பத்தில் வந்த கடைசி வாரிசு
2. பெஸ்து பவுல் அப்போஸ்தலனை விசாரிக்கும் நியாஸ்தலத்தில் தன் மனைவியுடன் அறிமுகமாகின்றார் (அப். 25—26)
3. பெஸ்துவும் ஏரோது அக்ரிப்பாவும் பவுல் குற்றமற்றவர் என்ற தீர்மானித்திற்கு வருகின்றார்கள்
4. பவுலை விடுதலைசெய்யும் அளவிற்கு வந்தவன் (26:31—32) .

# புதிய ஏற்பாடு- பின்னணியம்



தேன் துளிகள்

## Herod’s Family Tree: ஏரோது மன்னன்குடும்பம்





தேன் துளிகள்

## 3. முதல் நூற்றாண்டின் பாலஸ்தீனம்

### 2. பொந்தி பிலாத்து (Pontius Pilate) கி.பி. 26–36

1. புதிய ஏற்பாட்டில் மிகப் பிரசித்திப்பெற்றவர்.
2. கிறிஸ்துவை சிலுவையில் அறைவதற்கு நியாயம் விசாரித்த ரோம கவர்னர் (யோவான். 18:38—19:6)
3. கிறிஸ்து குற்றமற்றவர் என்று மிக தைரியமாக மூன்று முறை பிரகடனம் செய்தவர்
4. கிறிஸ்துவை குறித்து தம்முடைய மனைவியின் மூலம் எச்சரிக்கப்பட்டவர் (மத். 27: )
5. கிறிஸ்துவிடம் மிக நுணுக்கமாக விசாரித்து அவர் யார் என்று அறிந்துகொண்டவன்
6. கிறிஸ்துவின் இரத்தப்பழிக்கு பாத்தியப்படாதவன் (கை கழுவுகிறார்)
7. கிறிஸ்துவின் சிலுவையின் தன்னுடைய அறிக்கையை சமர்ப்பித்தவர்
8. கிறிஸ்துவை அடக்கம் செய்ய அனுமதி கொடுத்தவர்
9. கிறிஸ்துவின் கல்லறையை பாதுகாக்க அனுமதி கொடுத்தவர்
10. சரித்திரத்தில் திபேரியு ராயன் முன் நிற்கும்படி பணிக்கப்பட்டார் (கி.பி. 36), பின்பு அவரைக்குறித்து ஒன்றும் குறிப்புகள் இல்லை.







## 3. முதல் நூற்றாண்டின் பாலஸ்தீனம்

### 3. நிலவில் இருந்த புறஜாதி மதங்கள்

கிறிஸ்துவம் என்ற மார்க்கமானது, கிறிஸ்துவானவர் வந்தவுடன் ஜனங்கள் உடனே ஏற்றுக்கொண்ட மார்க்கமாக காணப்படவில்லை. காரணம், ஏற்கனவே இருந்த புறஜாதிகள் மதங்களின் ஆழ்ந்த தாக்கமானது, கிறிஸ்துவிற்கும், அவருடைய போதனைகளுக்கும் எதிர்ப்பு அலையை உருவாக்கியது.

மட்டுமல்லாமல், புதியதாக உதித்த மதங்களும், கொள்கைகளும் அந்த காலகட்டத்தில் ஜனங்களிடையே பலவிதமான உணர்வுகளை ஏற்படுத்தியது. அப்படி ஜனங்களுடைய செல்வாக்கு நிறைந்த ஐந்துவிதமான மத, தத்துவ கொள்கைகள் அடங்கியவைகளை கவனிக்கலாம்.

#### 1. கிரேக்க – ரோமர்களின் கடவுள் வழிபாடு (Graeco – Roman Pantheon)

*பொதுவான ஜனங்கள் இயற்கை வழிபாடு (அனிமிசம்–) செய்துவந்தனர். ஒவ்வொருவருக்கும் உள்ள எல்லைகளின் அடிப்படையில் ஒவ்வொருவரும் தெய்வ நம்பிக்கைகொண்டிருந்தனர்.*

# புதிய ஏற்பாடு- பின்னணியம்



தேன் துளிகள்

## 3. நிலவில் இருந்த புறஜாதி மதங்கள்: 1. கிரேக்க – ரோமர்களின் கடவுள் வழிபாடு (Graeco – Roman Pantheon)

1. ஒரு விவசாயி: அவர் சார்ந்த நிலம் அதைச்சார்ந்த பொருள்களை தெய்வமாக வழிபட்டார். காரணம் ஒவ்வொரு நாளும் இப்பொருள்களை பயன்படுத்துவதாலும், அவைகள் இவருக்கு திருப்பி நன்மைசெய்வதாலும், அவைகள் வழிபாட்டிற்கு உகந்ததாக இருந்தது. உதாரணம். நெருப்பு, கலப்பை, மாடு இன்னும் பல.
2. ஒவ்வொரு கால சூழலிற்கு ஏற்ப: ஒவ்வொரு தெய்வ நம்பிக்கைகள் பெருகி, அதன் அதன் காலங்களில் அவைகள், மிக அதிகமாக கொண்டாடப்பட்டன.
   1. காடுகளின் தெய்வங்கள் மற்றும் வீட்டு நிலங்களின் தெய்வங்கள் (வலிமைமிக்க மிருகங்கள், உதவும் மிருகங்கள்)
   2. ஆகாயத்தின் தெய்வங்கள் மற்றும் ஆறுகளின் தெய்வங்கள் (சந்திர, சூரிய, விண்மீன், மீன், முதலை)
   3. விதைப்பின் தெய்வங்கள் மற்றும் அறுவடையின் தெய்வங்கள் (பொங்கல் – விவசாயம் சார்ந்தது)

   இன்றும் இந்த நம்பிக்கைகளை பரவலாக ஜனங்கள் கடைபிடிப்பதைக் காணலாம். (பூமி பூஜை, ஆயுத பூஜை)



தேன் துளிகள்

**3. நிலவில் இருந்த புறஜாதி மதங்கள்: 1. கிரேக்க – ரோமர்களின் கடவுள் வழிபாடு (Graeco – Roman Pantheon)**

Roman Saturnalia – ரோமர்களின் வேளாண் தெய்வத்திற்கு கொண்டாடிய பண்டிகையானது மிகவும் விசேஷித்தவிதமானதாக இருந்தது.

1. Saturn – சாட்டூர்ன் – (வேளாண்மை தெய்வம்) என்ற தெய்வத்திற்கான சிறப்புப் பண்டிகை
2. டிசம்பர் 17ம் தேதியிலிருந்து டிசம்பர் 23 வரை பண்டிகை தினங்கள்
3. இந்தப் பண்டிகை ரோமர்கள் நாட்காட்டியில் மிக விசேஷித்த, மிகவும் எதிர்பார்க்கப்படும் ஒன்றாகும்

காரணம்: விடுதலையோடு, மிகச் சுதந்தரமாக கொண்டாடும் பண்டிகை

1. விருந்துண்ணல் தான் இதனுடைய பிரதானமான வழிமுறை. விதவிதமான உணவுகள், திராட்சை ரசத்துடன் பரிமாறப்படும்.
2. சமூக சட்டதிட்டங்களில் மாற்றம். அடிமைத்தனம் என்பது பொதுவாக இருந்த அக்காலகட்டங்களில், அடிமைகள் எஜமானர்களுக்கு ஊழியம் செய்வார்கள் என்பதைக் காட்டிலும், இந்தப் பண்டிகையின்போது எஜமானர்கள் தங்கள் அடிமைகளுக்கு சேவை செய்வார்கள்.
3. பரிசு வழங்குதல்: ஒவ்வொருவரும் கண்டிப்பாக மற்றவர்களுக்கு பரிசளித்து கொண்டாடும் பண்டிகையாகும் இது. “Sigillaria” “சிகிலேரியா” என்று இந்த விசேஷத்தை அழைப்பார்கள்.



3. நிலவில் இருந்த புறஜாதி மதங்கள்: 1. கிரேக்க – ரோமர்களின் கடவுள் வழிபாடு (Graeco – Roman Pantheon) ன் துளிகள்

Roman Saturnalia – ரோம வேளாண் தெய்வம்






4. பண்டிகை கொண்டாட்டம்:
    1. பாடல் பவனி
    2. வீதிகளில் நடனம்
    3. களியாட்டுக்கள்
5. அலங்காரம்
    1. வீடுகள் மற்றும் பொதுக்கட்டிடங்கள் அலங்கரித்தல்
    2. மர அலங்காரங்கள்
6. கோயில்கள் மற்றும் பலிகள்:
    1. கோயில்களுக்கு கட்டாயமாக செல்லுதல்
    2. விருந்துபடைத்தல்



பிற்காலத்தில் “கிறிஸ்துமஸ்” பண்டிகை இதை கடைப்பிடிக்கின்றது.

# புதிய ஏற்பாடு- பின்னணியம்



## 3. நிலவில் இருந்த புறஜாதி மதங்கள்: 1. கிரேக்க – ரோமர்களின் கடவுள் வழிபாடு (Graeco – Roman Pantheon)

கிரேக்கர்களின் ஆதிக்கமானது ஜனங்களின் பொதுவாழ்வில் பல மாற்றங்களைக் கொண்டுவந்தது.

1. சில தெய்வங்களின் பெயர்கள் பிரபலமானது.
2. ஜனங்கள் தங்களுடைய குலதெய்வங்களை விட்டு, அரசாங்கம் அறிமுகப்படுத்தும் தெய்வங்களை பின்பற்றும்படி வற்புறுத்தப்பட்டது.
3. இது அனேகருக்கு ஓர் மன அழுத்தமாக மாறிப்போனது.
4. ப்ளேட்டோ என்ற கிரேக்க தத்துவ ஞானி: "தெய்வங்களின் கதைகள் வாலிபர்களை திசைதிருப்புமாகையால், கண்டிப்பாக அவைகள் நாட்டிலிருந்து விலக்கப்படவேண்டும்" என்று தன்னுடைய "ரிபப்ளிக்" 2, 376; 3, 390ல் கூறியுள்ளார்.
5. அகஸ்து (Augustus) என்பவர் காலத்தில், அநேக கோயில்கள், குருமார்கள், பூஜாரிகள் ஏற்படுத்தப்பட்டனர்.
6. ஒவ்வொரு தனிமனிதனும், அவன் எந்த எல்லைகளில் வாழ்ந்து வருகின்றானோ, அந்த இடத்தில் உள்ள தெய்வங்களை வழிபட நேர்ந்தது. அதுவே, அவன் வேறொரு இடத்திற்குச் செல்வானானேயாகில், அங்குள்ள ஸ்தல தெய்வங்களை வணங்க நேரிட்டது. இது இன்னும் அதிகமான குழப்பங்களை கொண்டுவந்தது.

# புதிய ஏற்பாடு- பின்னணியம்



தேன் துளிகள்

## 3. நிலவில் இருந்த புறஜாதி மதங்கள்: 1. கிரேக்க – ரோமர்களின் கடவுள் வழிபாடு (Graeco – Roman Pantheon)



புதிய ஏற்பாட்டில் இந்த மத நம்பிக்கைகளின் தாக்கதை நாம் காணவும் செய்யலாம். (அப். 19: 27—35)

அப்போஸ்தலர் ( Acts) 19:34 அவன் யூதனென்று அவர்கள் அறிந்தபோது, எபேசியருடைய தியானாளே பெரியவள் என்று இரண்டுமணி நேரமளவும் எல்லாரும் ஏகமாய்ச் சத்தமிட்டுக்கொண்டிருந்தார்கள்.



வ. 35. பட்டணத்துச் சம்பிரதியானவன் ஜனங்களை அமர்த்தி: எபேசியரே, எபேசியருடைய பட்டணம் மகா தேவியாகிய தியானாளுக்கும் வானத்திலிருந்து விழுந்த சிலைக்கும் கோவிற்பரிசாரகியாயிருக்கிறதை அறியாதவன் உண்டோ?

இங்கு இரண்டு தெய்வங்களின் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன:

1. தியானாள் (Diana)
2. வானத்திலிருந்து விழுந்த சிலை (From Jupiter – the sky god)



முதல் நூற்றாண்டில் மதம் மற்றும் மதம் சார்த்த நம்பிக்கைகள் மிகவும் உணர்வுப்பூர்வமாக இருந்தது.

## 2. Emperor Worship – *இராய ஆராதனை*:

ஜனங்கள் பொதுவாக தங்களுடைய குலதெய்வங்களை வழிபட்டாலும், நாட்டினுடைய இராயன் (சக்ரவர்த்தி) என்ற பெரிய தலைமைத்துவம் மக்களால் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகவும், மரியாதை, கனம், புகழ் செலுத்தவேண்டிய கட்டாயத்தினாலும், நாட்டின் தலமைத்துவத்தை ஜனங்கள் வழிபட ஆரம்பித்தனர்.

ஹெலனியர் மற்றும் செலூக்கியர், நாட்டின் தலைமைத்துவத்தை பெரிதும் மதித்து அவர்களை அழைக்கும்போது கூட:

1. கர்த்தர் (*Kurios* – குரியோஸ்) எஜமானன், ஏமான் (மலயாளம்)
2. இரட்சகர் (*Soter – சோட்டர்*)
3. தெய்வீக அவதாரம் (*Epiphanes – எப்பிஃபானஸ்*) என பெயர்வைத்து அழைத்தனர்.

ஓர் நாட்டை ஆள்வதற்கு திறமையும், ஞானமும், பராக்கிரமும் உள்ளவர்கள், ஏதோ ஓர் சக்தியால் நிறைந்திருப்பார்கள் என்ற அளவுக்கடங்கா நம்பிக்கையில் இப்படி அழைத்தார்கள்.

இவர்களின் தெய்வீகத்துவமானது, நாட்டிற்கு நன்மையுண்டாக்க மட்டுமே என இருந்தது.

இந்த நம்பிக்கையானது காலப்போக்கில், நாட்டின் தலமைத்துவத்தை தெய்வமாக மாற்றிக்காண்பித்தது.

# புதிய ஏற்பாடு- பின்னணியம்



தேன் துளிகள்



## நிலவில் இருந்த புறஜாதி மதங்கள்: 2. Emperor Worship – இராய ஆராதனை:

1. ஜீலியஸ் சீசர் – அவரின் மரணத்திற்கு பிறகு *Divus Julius டிவஸ் ஜீலியஸ்* (தெய்வீக ஜீலியஸ்) என்றழைக்கப்பட்டார்.

2. ஒக்டேவியன் என்பவர் பின்னர் அகஸ்து இராயன் (Octavian later known as Emperor Augustus) என்றழைக்கப்பட்டவருடைய காலத்தில் இருந்து, மரிக்கும் ஒவ்வொரு இராயனையும் தெய்வமாக கருவதற்கு ரோம செனேட் (Senate)தீர்மானிக்கும் என்றார். இதில் அனேகர் நம்பிக்கைவைக்கவில்லை.





3. காலிகுலா என்ற சக்ரவர்த்தியின் காலத்தில் (Caligula), தன்னுடைய சிலையை எருசலேம் தேவாலயத்தில் நிறுவவேண்டும் என்று கட்டளையிட்டார்.

4. டொமிஷியன் காலத்தில் (Domitian) இராயனை தெய்வமாக வணங்க வேண்டும் என்ற சட்டம் இயற்றப்பட்டது. தவறியவர்களை கொடுமையான தண்டனைக்குள்ளாக்கும் சட்டமும் அமுல்படுத்தப்பட்டது.

கிறிஸ்துவிடம் வரிசெலுத்தலாமா என்ற கேள்வி வருவதற்கு இதுவும் ஒரு காரணமாக இருந்தது. மத். 22:17—21; மாற். 12:14—17; லூக். 20:22—25.



# புதிய ஏற்பாடு- பின்னணியம்




தேன் துளிகள்


இராயனை வணங்க மறுத்தவர்களுக்கும், கிறிஸ்துவை பின்பற்றினவர்களுக்கும் பலவிதங்களில் உபத்திரவங்கள் ஏற்படுத்தப்பட்டன.

1. ஏரோதியர்கள் வழி:
    1. சிறையில் அடைத்தல் (மத். 4:12 – யோவான் ஸ்நாபகன்)
    2. சிறைச்சேதம் செய்தல்
        1. யோவான் ஸ்நாபகன் (மத். 14:10)
2. யூதர்கள் வழி:
    1. கிறிஸ்துவை சிலுவையிலறைதல் (சுவிசேஷ புஸ்தகங்கள்)
    2. ஸ்தேவனை கல்லெறிதல் (அப்போஸ்தலர் 7 ம அதிகாரம்)
    3. கிறிஸ்தவர்களை துன்புறுத்துதல் (எபிரேயர் 11ம் அதிகாரம்)
3. ரோமர்கள் வழி
    1. சிறைபடுத்துதல் (அப்போஸ்தல நடபடிகள்)
        1. பேதுரு (அப்போஸ்தலர் 12:1—19)
        2. பவுலும் சீலாவும் (அப். 16:16—40) பிலிப்பு பட்டணத்தில்
        3. பவுல் எருசலேமில் (அப். 21:27—40; 22:22—29; 23:23—35)
        4. பவுல் ரோமில் (அப். 28:16—31).
    2. சிறைச்சேதம் செய்தல்
        1. யாக்கோபு (அப்போஸ்தலர் 12:1—2)













## 3. Mystery Religions – *மர்ம மதங்கள்* :

ஜனங்களுக்கு பலவகைகளில் தெய்வ நம்பிக்கையை கட்டாயப்படுத்தி: ஸ்தல தெய்வங்களை நம்பு, இராயனை வணங்கு என்று கட்டளை பிறப்பித்ததாலும்,

ஜனங்களின் தெய்வத்தேடல் குறையவில்லை. அவர்களின் எதிர்பார்ப்பு என்னவென்றால்:

1. தங்களுடன் மிக நெருங்கிய உறவில் தெய்வம் இருக்கவேண்டும்.
2. தங்களை ஆபத்திலிருந்து உடனடியாக காப்பாற்றவேண்டும்.


இந்த இரு தகுதிகள் யாருக்கேனும் இருப்பின், அவைகளை நம்பவேண்டும் என்ற ஏக்கம் உள்மனதில் இருந்தது.

ஆகவே, பல தேசங்களின் சக்திமிகு தெய்வங்கள், இவர்கள் மத்தியில் நம்பப்படுகின்றவைகளாக இருந்தன. அவைகள் இவர்கள் தாகத்தை தனிப்பவைகளாக இருந்தன. ஏற்கனவே **எலூசியன்** என்ற மதத்தை வெகு காலங்களாக கிரேக்க நாட்டில் ஜனங்கள் அனுசரித்து வந்தார்கள். அதன் மத்தியில் கிழக்கிலிருந்து வந்த அனேக மதங்கள் அங்கு ஆதிக்கம் செலுத்தியது.

அவைகள் யாதெனில்?



## 3. Mystery Religions – *மர்ம மதங்கள்* :




1. The cult of Cybele, the Great Mother – சிபெல்லே – மஹா தாய்

   இந்த நம்பிக்கை ஆசியாவிலிருந்து. ப்ரிஜியா என்ற நாட்டிலிருந்து உருவான மதம், பிற்கால ரோமர்களின் ஆஸ்தான மத நம்பிகையாக மாறிப்போனது.

2. Isis and Osiris or Serapis – இசிஸ் மற்றும் ஒசிரிஸ் அல்லது செரா.ஃபிஸ்

   எகிப்திலிருந்து வந்தது. இசிஸ் ஒசிரிஸின் சகோதரி ஆனால் மனைவி.



3. Mithraism – மித்ரையிசம்

   பெர்சியாவிலிருந்து வந்தது. சூரியக் கடவுள்.



ஜனங்கள் இவைகளை நம்புவதற்கான முக்கியக்காரணம்:

1. இவைகள் அவதாரங்களாக பூமிக்கு வந்தன
2. இவைகள் மரித்து பின்பு உயிர்த்தெழுந்தன என்ற நம்பிக்கை இருந்ததால் தான்.

கொலோசே சபையில் (2:18—19) தேவ தூதர்களுக்குச் செய்யும் ஆராதனையை பவுல் எழுதுகின்றார்.



தேன் துளிகள்

## 4. The Occult Religions – *அமானுஷ்ய மதங்கள்* :



உலகில் உள்ள அத்துனை சக்திமிக்க விஷயங்களை ஜனங்கள் நம்பியும் ஆராதித்தும் வந்தார்கள். ஆவி உலகம் ஒன்று உண்டு, அந்த ஆவி உலகில் உள்ள சக்திமிக்கவைகளை சரியான ரீதியில் பயன்படுத்தினால் நல்ல ஆதாயம் உண்டு என்ற நம்பிக்கை பெருமளவில் அன்றைய ஜனங்களிடம் காணப்பட்டது.

**யோவான் (Jn) 4:48 அப்பொழுது இயேசு அவனை நோக்கி: நீங்கள் அடையாளங்களைய அற்புதங்களையும் காணாவிட்டால் விசுவாசிக்கமாட்டீர்கள் என்றார்.**

ரோமர்களின் ஆட்சிக்காலத்தில் பரவலாக மாந்திரீகத்தின்மேல் ஜனங்கள் அதீத நம்பிக்கை வைத்திருந்தார்கள். புறஜாதிகளைக் காட்டிலும் யூதர்கள் அற்புதங்களையும் அடையாளங்களையும், மாந்திரீக நம்பிக்கைகள் மேல் அதிகம் நாட்டம் உடையவர்களாக இருந்தார்கள்.





ரோமர்களின் துவக்க காலத்தில் இருந்தே, ஒரு மிருகத்தை பலிசெலுத்துவதின் மூலமாக அல்லது ஒரு பறவையை பறக்கவிட்டபின் அது பறந்து செல்லும் திசையை வைத்து ஆருடம் சொல்லிவந்தார்கள்.

ஒருவரின் கை விரல் காண்பிப்பதிலேயே அவர் என்ன சொல்லுகின்றார் என்பதை உணரலாம். “முத்ராஸ்—mudras” அல்லது “கெயிர்—kheir” என்றழைப்பார்கள். “வல்லமை காண்பிக்க, பிசாசை துரத்த, என்று பல விசேஷமான அர்த்தங்கள் உள்ளடக்கியதாக இருந்தது.




தேன் துளிகள்

# 4. The Occult Religions – அமானுஷ்ய மதங்கள் :

இஸ்ரவேல் ஜனங்களுக்கு மாந்திரீகத்தின் மேல் உள்ள அறிவு பலவகைகளில் கிடைக்கப்பெற்ற ஒன்றாக இருந்தது.







1. எகிப்தில்

ஆதி. (Gen) 41:8 காலமே பார்வோனுடைய மனம் கலக்கங்கொண்டிருந்தது; அப்பொழுது அவன் எகிப்திலுள்ள சகல மந்திரவாதிகளையும் சகல சாஸ்திரிகளையும் அழைப்பித்து,

யாத். (Ex) 7:3 நான் பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்தி, எகிப்துதேசத்தில் என் அடையாளங்களையும் அற்புதங்களையும் மிகுதியாய் நடப்பிப்பேன்.

யாத்திராகமம் (Exodus) 7:11 அப்பொழுது பார்வோன் சாஸ்திரிகளையும் சூனியக்காரரையும் அழைப்பித்தான். எகிப்தின் மந்திரவாதிகளும் தங்கள் மந்திரவித்தையினால் அப்படிச் செய்தார்கள். (V. 22; 8:7, 18; 19:1)

2. பாபிலோனியரின் சிறையிருப்பில்

தானியேல் (Dan) 2:2 அப்பொழுது ராஜா தன் சொப்பனங்களைத் தனக்குத் தெரிவிக்கும்பொருட்டு சாஸ்திரிகளையும் ஜோசியரையும் சூனியக்காரரையும் கல்தேயரையும் அழைக்கச் சொன்னான்; அவர்கள் வந்து, ராஜசமுகத்தில் நின்றார்கள்.

2 Then the king commanded to call the magicians, and the astrologers, and the sorcerers, and the Chaldeans, . . . .

3. கிரேக்க ரோம சாம்ராஜ்ஜியத்தில்

*அப். (Acts) 19:13 அப்பொழுது தேசாந்தரிகளாய்த் திரிகிற மந்திரவாதிகளாகிய யூதரில் சிலர். . . .*



தேன் துளிகள்

## 4. The Occult Religions – *அமானுஷ்ய மதங்கள்* :

## 5. புதிய ஏற்பாடு

இஸ்ரவேல் / யூத ஜனங்களுக்கு மந்திரீகத்தின் மேலும், அமானுஷ்ய விசயங்களை செய்வதிலும் அதிகமாக ஈடுபாடு உடையவர்களாக காணப்பட்டனர்.





**1. அப். 8:9—24: — சீமோனின் மந்திரவாதம்**

1. **மந்திரவாதத்தில் பெரியவன்**
2. **ஜனங்களின் பிரமிப்பு – அவர்களின் ஆதரவு**
3. **தேவனுடைய சக்தி என்ற பிரகடனம்**
4. **ஜனங்களின் அடிமைத்தனம்**
5. **பிலிப்புவின் அற்புதம் கண்டு சீமோன் பிரமித்தல் (ஒருவருக்கு ஒருவர் மேலானவர்கள்)**
6. **பணம் கொடுத்து அதை சொந்தமாக்கிக்கொண்டிருந்தனர்.**
7. **மேலான தீர்க்கதரிசனம் கேள்விப்படும்போது, அதற்கு பயப்படுதல் (வ. 24).**

**2. அப். 13:6—11: — பர்யேசுவின் மந்திரவாதம்**

1. **மாயவித்தைக்காரன் (எலிமா)**
2. **கள்ளத்தீர்க்கதரிசி**
3. **யூதன் – பவுலிடம் தோற்றுப்போகின்றா. இதைக்கண்ட அதிபதி விசுவாசியாகின்றான். (வ. 12**





தேன் துளிகள்

# 4. The Occult Religions – அமானுஷ்ய மதங்கள் : 5. புதிய ஏற்பாடு

3. அப்போ. 19:19 – எபேசு சபை



1. மந்திரவாதிகள் இருந்தனர்
2. பெரிய பெரிய புஸ்தகங்களை வைத்திருந்தனர்
3. மந்திரவாதம் சபை விசுவாசத்திற்கு எதிரானது
4. மந்திரவாத புஸ்தகங்கள் எல்லாம் தீயினால் எரிக்கப்படுகின்றது.

சிந்திக்க ஓர் கேள்வி:

விசுவாசிகள் என்று அழைக்கப்படுபவர்கள் மாந்திரீகத்தின் மீது நம்பிக்கை வைக்கலாமா? கூடாதா?

வைக்கலாம் என்றால் – நாள், நேரம், அதிர்ஷ்டம் என்பவைகளை நம்பிப் பின்பற்றலாம். நன்மையுண்டாகும் என்ற எண்ணத்தில்.

வைக்கக்கூடாது என்றால் அதற்கு வேத ஆதாரம் வேண்டும், ஆதாரத்தின் அடிப்படிப்படையில் கீழ்ப்படியவேண்டும்!

பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு மந்திரீகத்திற்கு சாதகமா? அல்லது பாதகமாக நிற்கின்றதா?

பதில் பாதகமாக நிற்கின்றது. ஆதாரம்?

1. உபாகமம் 18:10–12, 20:– "குறிசொல்லுகின்றவன், நாள்...அஞ்சனம் பார்கின்றவன், ... மந்திரவாதி....உங்களுக்குள்ளே இருக்கவேண்டாம்.
2. மீகா. 5:12 – இல்லாமற்பண்ணுவார்
3. 1 கொரிந்தியர் 10:20–21 – அவர்களோடே பங்குள்ளவர்களாக இருக்கக்கூடாது.



தேன் துளிகள்

# 4. The Occult Religions – *அமானுஷ்ய மதங்கள்* : 5. புதிய ஏற்பாடு

## 4. Astrology – கணிப்பியல்



கணிப்பியல் என்றால், வானவியல், கோள்களின் பலன்களை அறிவிக்கும் ஒன்றாகும். சோதிடம் என்பது இதனின் மறு பெயராகும்.

பாபிலோன் தேசத்தில் உருவான ஒன்று புதிய ஏற்பாடு காலங்களிலும் மிகப்பெரிய அளவில் பாதிப்பை கொண்டுவந்ததாக இருந்தது.

கோள்களும், வான் வெளியில் அவற்றின் நகர்வுகளும் உலகில் வாழும் எல்லா உயிரினங்கள் மீதும், அவற்றின் செயற்பாடுகளிலும், மற்றும் பலவிதமான இயற்கை நிகழ்வுகளிலும் தாக்கத்தை உண்டாக்குகின்றன என்னும் கருத்துருவே சோதிட நூலின் அடிப்படையாகும்.



சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் அடிப்படையில் – ராசிகள் உருவாக்கி அதன் அடிப்படையிலான நம்பிக்கைகள் பெருகியது.

அப்போஸ். 7:42—43 – பழைய ஏற்பாடு இஸ்ரவேலர் எப்படி வானசேனைக்கு ஆராதனை செலுத்தினார்கள் என்றும், ஒரு நட்சத்திரத்திற்கே பெயர் வைத்து அதை ஆராதித்தார்கள் என்றும் சொல்லுகின்றது.

ரெம்பான் என்னும் நட்சத்திர தெய்வம் என்பது அதன் பெயர்.





## 5. The Philosophies – தத்துவஞானங்கள்

மத நம்பிக்கைகள் மனிதனுடைய அடிப்படைத் தேவைகளை சந்திக்க தவறியபோது, மனிதர்களின் சிந்தாந்தங்கள், தத்துவ ஞானங்கள் பெரியளவில் மனுஷர்களுக்கு கை கொடுத்தது.

தத்துவம் என்றால் என்ன? தத்துவம் என்பது:

1. இயற்கை, சமூகம், சிந்தனை ஆகிய மூன்றைப்பற்றிய கோட்பாடுகளும் கொள்கைகளும் கொண்டதாகும்.
2. இப்பிரபஞ்சத்தைக் குறித்து இருக்கக்கூடிய அத்துனை ஞானங்களையும் ஒழுக்கம் கிரமாம ஒன்று சேர்ப்பது, பின்பு மனிதனுடைய அனுபவங்களை அதனுடன் ஒருங்கிணைப்பதே அதனின் முக்கிய நோக்கமாகும்.

ஆனால், பலமுறை தத்துவஞானம் என்பது:

1. Crude – ஒழுங்கற்றதாக, பண்படாததாக
2. Naïve – அனுபவம் இல்லாத்ததாக, மிகவும் எளிமையானதாக
3. Subtle – வெளிப்படையானதாக இல்லாமல்
4. Profound – ஆழ்ந்ததாகவும், அறிவுள்ளதாகவும் இருந்துள்ளது.

சிலபேரின் தத்துவஞானம் பரம்பொருள் இருக்கின்றார் என்பதை அங்கீகரிக்கின்றது. ஆனால் பலமுறை, உலகத்தையும், உலகம்சார்ந்த (Materialistic) பணம் பொருட்களை மட்டுமே உயர்த்துவதாக இருந்தது.



தேன் துளிகள்

## 5. The Philosophies – *தத்துவஞானங்கள்*

தத்துவஞானமானது எப்பொழுதுமே தேவனை சார்ந்ததாக இருக்கவில்லை.

தேவனிடமிருந்துதான் ஞானமே வருகின்றது என்பதையும் நம்பவில்லை.

மனிதன் தன்னுடைய சுற்றுச்சூழலின் அவன் யார், அவனுடைய திறமை என்ன, அவனுடைய வாழ்க்கையின் முடிவை எப்படி அமைத்துக்கொள்கின்றான் என்ற அடிப்படையில் தான் இயங்கி வருகின்றது.

ஞானம் என்பது மற்றொருவருடைய தனிப்பட்ட அல்லது பொது ஜனத்தின் அனுபவங்களின் அடிப்படையில் தீர்மானிக்கக்கூடிய விஷயமாகும். இதற்கென்று தனியே தெய்வத்தின் உதவி தேவையில்லை என்பதாகும் இதனின் வாதம்.

பாம்பு புற்றுக்குள் கை விட்டால் என்ன ஆகும்?



அது எப்படி உங்களுக்குத் தெரியும்?

ஏற்கனவே, எங்கோ, யாருக்கோ இந்த அனுபவம் ஏற்பட்டிருப்பதால் இந்த அறிவு போதும் என்பதுதான் இதனின் வாதம்.

பலவிதமான தத்துவ ஞானங்கள் அந்தக் கால கட்டத்தில் நிலவில் இருந்தது. ஞானம் அடைவதே இரட்சிப்பு, பாவம் என்பது அறியாமை என்ற சத்தம் ஜனங்களிடையே மிகப்பரவலாக இருந்தது.

தெரிந்து செய்யும் பாவம் → தெரியாமல் செய்யும் பாவம்.



தேன் துளிகள்

## 5. The Philosophies – தத்துவஞானங்கள்

அப்போஸ்தலனாகிய பவுல் விசுவாசிகளை எச்சரிக்கின்றார்!

கொலோசேயர் 2:8 –

"லௌகிக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களைக் கொள்ளைகொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும் உலகவழிபாடுகளையும் பற்றினதேயல்லாமல் கிறிஸ்துவைப்பற்றினதல்ல."

வ. 21. "மனுஷருடைய கற்பனைகளின்படியும் போதனைகளின்படியும் நடந்து: தொடாதே, ருசிபாராதே, தீண்டாதே என்கிற கட்டளைகளுக்கு உட்படுகிறதென்ன?"

1. பிளேட்டோனிசம் (Platonism)
2. க்னோஸ்டிசிசம் (Gnosticism)
3. நியோ-பிளேட்டோனிசம் (Neo-Platonism)
4. எப்பிக்கூரியனிசம் (Epicureanism) – அப். 17:18, 32 –
5. ஸ்டோய்சிசம் (Stoicism)
6. சினிசிசம் (Cynicism)
7. ஸ்கெப்டிசிசம் (Scepticism) என்ற பிரிவுகளில் தத்துவஞானம் பரவிக்கிடந்தது. பவுலின் எச்சரிப்பு அவசியம்.



தேன் துளிகள்

## 5. The Philosophies – *தத்துவஞானங்கள்*

அப்போஸ்தலனாகிய பவுல் விசுவாசிகளை எச்சரிக்கின்றார்! கொலோசேயர் 2:8 –

“லௌகிக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களைக் கொள்ளைகொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும் உலகவழிபாடுகளையும் பற்றினதேயல்லாமல் கிறிஸ்துவைப்பற்றினதல்ல.”

கிறிஸ்து யார்?

மாம்சத்தில் வந்தவர்

மனிதர்களுக்காக பலியானவர்

மகிமையாக உயிர்த்தெழுந்தவர்

மன்னிப்பளிப்பவர்

மகிமைக்காக வாழவைப்பவர்

மறுபடியும் திரும்ப வருபவர்

மனிதர்களை நியாயம் விசாரிப்பவர்

மகிமையில் ஏற்றுக்கொள்பவர்

ஒருவன் இவரை தன்னுடைய மனித ஞானத்தின் அடிப்படையில் மறுதலிப்பவனாக இருப்பான் என்றால்? அவன் யார்?

**யோவானின் அப்போஸ்தனின் அறிக்கை:**

1. **மாம்சத்தில் வந்த கிறிஸ்து:**

யோவான். 1:14:- அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.

2. **அறிக்கைசெய்யவேண்டிய கிறிஸ்து:**

1 யோவா. (1 Jn) 2:22 இயேசுவைக் கிறிஸ்து அல்ல என்று மறுதலிக்கிறவனேயல்லாமல் வேறே யார் பொய்யன்? பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிறவனே அந்திக்கிறிஸ்து. (4:3; 2 யோ. 1:7)

Rom. 14:11; Phil. 2:10 – “He is Lord” Amen. Praise be to God.